**ஆராய்ச்சிகட்டுவ பிரதேச சபை - 2022**

-----------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஆராய்ச்சிகட்டுவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து ஆராய்ச்சிகட்டுவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்க இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான

கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட:டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ரூபா 23,000 தொகையான மின்விசிறிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பிழைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நாட்குறிப்பின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 15,063,910 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 10,374,227 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா '000 | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா '000 | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா '000 | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை ரூபா '000 | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா '000 | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா '000 | சேகரிக்கப்பட்ட வருமானம ரூபா '000 | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை ரூபா '000 |
|---|---|---|---|---|---|---|---|---|
| வீத வரியும் வரியும் | 7,652 | 7,455 | 3,112 | 17,533 | 7,769 | 7,517 | 5,312 | 16,039 |
| வாடகை | 7,330 | 6,288 | 5,929 | 1,700 | 6,708 | 5,125 | 5,127 | 1,709 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 904 | 3,422 | 1,843 | 1,801 | 1,014 | 510 | 536 | 67 |
| ஏனைய வருமானம் | 1,596 | 4,654 | 4,654 | - | 17,213 | 19,488 | 41,164 | 20,022 |
| மொத்தம் | 17,482 | 21,819 | 15,538 | 21,034 | 32,704 | 32,640 | 52,139 | 37,837 |

### 2.2.2 வருமானத்தை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான வீதவரி ரூபா 16,393,700 நிலுவையான ஏக்கர் வரி ரூபா 347,283 நிலுவையான நீர் வரி ரூபா 674,426 மற்றும் நிலுவை வாடகை ரூபா 1,700,468 என்பவற்றை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை சவருமானத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 5 ஆண்டுகளுக்கு ஒரு தடவை வீதவரி மறுசீரமைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வீதவரி மதிப்பீட்டின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டின் போதும் வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | வீதவரியை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நாளதுவரையாக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு இணங்க வருமானம் அறவிடப்படுதல் வேண்டும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினால் நிருவகிக்கின்ற நீர் செயற்திட்டத்திற்காக நீர் மீற்றர் பொருத்தப்பட்டிருக்காததுடன் மாதாந்தம் ரூபா 450 வீதம் நிலையான கட்டணம் அறவிடப்பட்டு வருகின்றது. | பொதுச் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில் லை. | உரிய நீர் மீற்றரினை துரிதமாக பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டில் ஆராய்ச்சிகட்டு, முந்தல் ஆகிய இரண்டு பிரிவுகளில் மாத்திரம் 109 டெங்கு நோயாளிகள் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் டெங்கு தடுப்புக்காக சுத்திகரிப்புச் செய்யும் 4 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஆபத்தான பிரதேசங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது. | சபை அதிகாரப் பிரதேசத்தினை உள்ளடக்கும் வகையில் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (இ) | சபையிடம் 94 குழாய்க் கிணறுகள் காணப்படுகின்றன என பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய தகவல்கள் நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்காததுடன் 03 குழாய்க் கிணறுகள் செயற்படும் நிலையில் காணப்படவில்லை. | எதிர்காலத்தில் கணக்காய்வு ஆலோசனைகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய தரவுகள் சரியாக நாளதுவரையாகப் பேணப்பட வேண்டியதுடன் செயற்படும் நிலையில் இல்லாத குழாய்க்கிணறுகள் சம்பந்தமாக துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 33,683,061 ஆக இருந்ததுடன் அதனுள் 05 ஆண்டுகளை மிகைத்த மீதிகளின் பெறுமதி ரூபா 14,563,019 ஆக இருந்ததுடன் இந்த நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 3,208,218 ஆக இருந்ததுடன் அவற்றில் 3 அண்டுகளுக்கு மேற்பட்ட 5 ஆண்டுகளுக்கு உட்பட்ட ரூபா 2,165,275 மீதியினைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய பணத்தை துரிதமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும. |

### 3.2. சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் பொறுப்பேற்க்கப்படாத 48 ஆதனங்கள் காணப்பட்டன. | எதிர்காலத்தில் அது துரிதமாக செய்யப்படும். | உரிய ஆதனங்களை பொறுப்பேற்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வருடாந்த பொருள் மீளாய்வு அறிக்கையினைப் பரீட்சித்த போது மிகைகள் பதிவேடுகளில் உள்ளடக்கப்டாதிருந்ததுடன் பற்றாக்குறைகள் சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருள் இருப்பு பதிவேட்டில் உள்ளடக்குவதற்கும் பற்றாக்குறைகள் தொடர்பாக உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | பொருள் மீளாய்வு அறிக்கையிலுள்ள சிபாரிசுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபைளயின் இரண்டாம் மட்டத்தில் 06 பதவிகளும் ஆரம்ப மட்டத்தின் 11 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன. | இதுவரை அங்கீகாரம் கிடைக்கவில்லை. | சபைக்கு தேவையான ஊழியர் எண்ணிக்கையை சரியாக இனங்கண்டு அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் 03 வாகனங்களை 2019 ஆம் ஆண்டிலிருந்து திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கோ அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாது துருப்பிடித்துக் காணப்பட்டன. | கைதவிர்ப்புச் சபையின் அறிக்கை கிடைத்ததன் பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்.

### 4.1. வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டிருந்த 10 பல்வேறு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 447,911 பணம் செலவு செய்யப்பட்டிருந்தும் எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டம் அடைந்து கொள்ளடப்படவில்லை. | அரசாங்க செலவுகளை கட்டுப்படுத்துவதற்கான சுற்றிக்கைக்கு இணங்க செலவுகளை கட்டுப்பட்டுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2. உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வினால் ஏக்கர் வரி, விடுமுறை, நீர் செயற்திட்டம் என்பன தொடர்பாக மாத்திரம் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது முறைப்படியாக உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அனைத்து துறைகளையும் உள்ளடக்கும் வகையில் கணக்காய்வினை திட்டமிட்டு கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**4.3 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சிதிட்டம் 2030 இன் பிரகாரம் அடைந்து கொள்ளப்பட வேண்டிய குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைந்து கொள்வதற்காக சபையினால் மீளாய்வாண்டிற்காக 10 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் இனங்காணப்பட்டு அவற்றில் 06 குறிக்கோள்கள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டன. | செலவுகளைக் கட்டுப்படுத்துதல் இடம்பெற்றதனால் நிறைவேற்ற முடியாதிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |